# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2076/13 - 2018 ජූනි මස 19 වැනි අඟහරුවාදා - 2018.06.19

*2076/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (xiv).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

20 (4) (ஆ) என்னும் பிரிவின்கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20 (4) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ ஆகிய நான், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அலுவல்களினது நிருவாகம் பாரதூரமான வகையில் ஒழுங்கு குலைந்துள்ளதென்றும் சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் இயல்பு நிலையை மீட்டெடுப்பதற்குத் தவறியுள்ளனரென்றும் திருப்திப்படுவதன்மீது, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்குச் சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச்சட்டம், நியதிச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதியின்கீழ் அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர்மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைச் சொல்லப்பட்டுள்ள துணைவேந்தருக்குப் பதிலாகப் பிரயோகிக்கின்ற, புரிகின்ற மற்றும் நிறைவேற்றுகின்ற நோக்கத்துக்காக, 2018, யூன் 18 ஆந் திகதியிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரியாகவிருப்பதற்குப் பேராசிரியர் உமா குமாரசாமி அவர்களை இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.

**கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ,**
உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2018, யூன் 18.

7-66


1A - PG 4084 — 507 (2018/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.